பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

22 03 2025 7 15

சனிக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. நாட்டின் வளர்ச்சிக்கு புத்தொழில் நிறுவனங்களின் கண்டுபிடிப்புகள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.
2. உள்ளாட்சி நிர்வாகம் உள்ளிட்ட அனைத்து நிலைகளிலும் பருவநிலை மாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று மத்திய அமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங் கேட்டுக் கொண்டுள்ளார்.
3. தில்லி சட்டப்பேரவை நடவடிக்கைகள் அனைத்தும் மின்னணு முறையில் மேற்கொள்ளப்பட உள்ளதாக மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.
4. நைஜீரியாவின் தென்மேற்குப் பகுதியில் மசூதி மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் 44 பேர் உயிரிழந்தனர்.
5. அகமதாபாத் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரிஷி ரெட்டி – கேசர்வானி இணை பட்டம் வென்றது.

[]<<<>>>[]

நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் புத்தொழில் நிறுவனங்கள் கண்டுபிடிப்புகளின் இருக்க வேண்டுமென்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

அகமதாபாத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை எட்டுவதில் புத்தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிப்பதாகக் கூறினார்.

புத்தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்காக நிதி ஒதுக்கீடு வழங்குவதற்கான நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

நாடு முழுவதும் புத்தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தீவிரப்படுத்தி இருப்பதாக திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

[]<<<>>>[]

தில்லி சட்டப்பேரவை நடவடிக்கைகள் அனைத்தும் மின்னணு முறையில் மேற்கொள்ளப்பட உள்ளதாக மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், காகித பயன்பாட்டை குறைக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாகக் கூறினார்,

இதற்காக தில்லி அரசும், நாடாளுமன்ற விவகாரங்கள் துறையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன்மூலம் மின்னணு நடைமுறைகளைப் பின்பற்றும் 28-வது மாநிலமாக தில்லி சட்டப்பேரவை திகழும் என்று திரு கிரண் ரிஜிஜூ கூறினார்.

[]<<<>>>[]

உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதன் காரணமாக தொழில்துறை முதலீடுகள் அதிகரித்துள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இதுவரை ஒன்று புள்ளி ஆறு ஒன்று லட்சம் கோடி அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில்துறை உற்பத்தி 14 லட்சம் கோடியாகவும், ஏற்றுமதி ஐந்து புள்ளி மூன்று ஒன்று லட்சம் கோடியாகவும் உயர்ந்துள்ளது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்புகள் 11 புள்ளி ஐந்து லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

2030-ஆம் ஆண்டிற்குள் விண்வெளியில் இந்தியா ஆய்வு மையத்தை அமைக்கும் என்று இஸ்ரோ தலைவர் திரு நாராணயன் தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மாநிலம் ஜலந்தர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், விண்வெளித் திட்டங்களை செயல்படுத்துவதில் இந்தியா முன்னணி நாடாக திகழ்கிறது என்று கூறினார்.

நிலவுக்கு மனிதனை அனுப்பி பத்திரமாக பூமிக்கு திருப்பி அழைத்து வரும் திட்டப் பணிகள் நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி வழிகாட்டுதலின்பேரில் இத்திட்டம் 2040-ஆம் ஆண்டுக்குள் செயல்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் வகையில் மாணவர்கள் ஏதாவது ஒரு துறையில் தங்களது திறனை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்று திரு நாராயணன் வலியுறுத்தினார்.

[]<<<>>>[]

உள்ளாட்சி நிர்வாகம் உள்ளிட்ட அனைத்து நிலைகளிலும் பருவநிலை மாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று மத்திய அமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுதில்லியில் பாரத் மண்டபத்தில் நடைபெற்ற பருவநிலை குறித்த கருத்தரங்கில் நிறைவு உரையாற்றிய அவர், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் இந்தியாவின் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க அளவில் வெற்றி கண்டுள்ளதாகக் கூறினார்.

பாசனத்திற்கான தண்ணீர், வெப்ப அலையால் ஏற்படும் தாக்கங்கள் போன்ற முக்கிய பிரச்சினைகளுக்கு உரிய முறையில் தீர்வு காணப்பட வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான கட்டமைப்புகள் உருவாக்கப்பட வேண்டுமென்று அமைச்சர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி கடந்த பத்து ஆண்டுகளில் இரட்டிப்பாகி உள்ளதாக சர்வதேச செலாவணி நிதியம் தெரிவித்துள்ளது,

சர்வதேச செலாவணி நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இரண்டு புள்ளி ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலராக இருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி 2025-ஆம் ஆண்டில் நான்கு புள்ளி மூன்று ட்ரில்லியன் டாலராக அதிகரித்து 105 சதவீத வளர்ச்சியை கண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே காலகட்டத்தில் அமெரிக்காவின் உள்நாட்டு மொத்த உற்பத்தி 66 சதவீதமாகவும், சீனாவில் 44 சதவீதமாகவும் இருந்தது என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

**[]<<<>>>[]**

சட்டவிரோதமாக ஆன்லைன் விளையாட்டுக்களை நடத்தி வந்த நிறுவனங்களின் 357 இணையதளங்களை மத்திய அரசு முடக்கியுள்ளது.

இது தொடர்பாக மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இத்தகைய நிறுவனங்கள் சரக்கு மற்றும் சேவை வரி கணக்கை தாக்கல் செய்யாமல் வரி ஏய்ப்பில் ஈடுபட்டு வந்ததை அடுத்து புலனாய்வு அமைப்பு அதிகாரிகள் சோதனை மேற்கொண்டதில் முறைகேட்டில் ஈடுபட்டது கண்டறியப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைகேடுகளில் ஈடுபடும் ஆன்லைன் கேமிங் நிறுவனங்களுக்கு எதிராக ஜி எஸ் டி புலனாய்வு தலைமை இயக்குநரகம் தீவிர சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 392 நிறுவனங்களின் வங்கிக் கணக்குகளும் முடக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சகத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

இந்தோ – பசிபிக் பிராந்திய நாடுகளின் வளர்ச்சிக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும் என்று வெளியுறவத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், அப்பகுதியில் உள்ள ஃபிஜி, **Kiribati**, மார்ஷல் போன்ற தீவுகளுக்கும், பப்புவா நியூகினியா உள்ளிட்ட 11 நாடுகளுக்கு சுகாதார கட்டமைப்பை வலுப்படுத்துவதற்குத் தேவையான உதவிகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியை கிரிப்பட்டி தீவுக்கு ஆறு படுக்கைகளுடன் கூடிய டையாலிசஸ் வசதிகளைக் கொண்ட கண்டெய்னரை இந்தியா அனுப்பி வைத்துள்ளது.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீரில் திடக்கழிவுகளால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு அறிவியல் ரீதியில் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்த யூனியன் பிரதேச சுகாதார அமைச்சர் **Sakeena itoo** தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், ஜம்முவின் வடக்குப் பகுதியில் உள்ள கோத்பால்வால் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை ஆலை அமைக்கப்படும் என்று கூறினார்.

நகர்புறங்களில் திடக்கழிவால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

சத்திஷ்கரில் பொருளாதார முறைகேடுகளில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டுள்ள ஐந்து அதிகாரிகளை பொருளாதார குற்றப்பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அம்மாநில சுகாதார சேவைகளுக்கான உபகரணங்கள் கொள்முதல் செய்ததில் 660 கோடி ரூபாய் அளவிற்கு முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக எழுந்த புகாரை அடுத்து அதிகாரிகள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அம்மாநிலம் முழுவதிலும் உள்ள சுகாதார மையங்களில் தேவையில்லாத மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக புலனாய்வு பிரிவின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கைது செய்யப்பட்டுள்ள அதிகாரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

**[]<<<>>>[]**

வன்முறையால் பாதிக்கப்பட்ட மணிப்பூரில் மக்களுக்கு உதவிடும் வகையில் சட்ட உதவிகள் மற்றும் மருத்துவ முகாம்களை உச்சநீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய ஐந்து பேர் கொண்ட குழு இன்று தொடங்கி வைத்தது.,

அம்மாநிலத்தில் உள்ள **Churachandpur** -ருக்குச் சென்ற இந்த குழு வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து கலந்துரையாடியது.

இதனிடையே அம்மாநில ஆளுநர் திரு அஜய்குமார் பல்லா பல்வேறு திட்டப்பணிகளை இன்று தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

நைஜீரியாவின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள மசூதி மீதான தாக்குதல் சம்பவத்தில் 44 பேர் உயிரிழந்தனர். 13 பேர் காயமடைந்தனர்.

மசூதியில் வழிபாடு நடைபெற்று கொண்டிருந்தபோது இந்த தாக்குதல் சம்பவம் நடைபெற்றதாக அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அல்கொய்தா அமைப்புடன் தொடர்பு கொண்டுள்ள ஜிகாதிஸ்ட் குழுக்கள் இந்த தாக்குதலை நடத்தியதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், தென்காசி உள்ளிட்ட சில மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறினார்.

**[]<<<>>>[]**

அகமதாபாத் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரிஷி ரெட்டி – கேசர்வானி இணை பட்டம் வென்றது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில். இந்த இணை 6-4, 6-2 என்ற செட் கணக்கில் இந்தியாவின் பிரஜ்வால் தேவ் - நிதின் சின்ஹா இணையை வென்றது.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டி வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று கொல்கத்தாவில் தொடங்கியது.

இன்னும் சற்று நேரத்தில் தொடங்க உள்ள முதல் ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான கொல்கத்தா – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டியில் டாஸ் வென்ற பெங்களூரு அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

ஐ பி எல் கிரிக்கெட் போட்டிகள் மே மாதம் 25-ஆம் தேதி வரை நடைபெறுகின்றன.

இதில் பங்கேற்கும் பத்து அணிகள் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெறுகின்றன.

**[]<<<>>>[]**

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலக கோப்பை கபடி போட்டியில் இன்று நடைபெறும் ஆடவர் அரை இறுதி ஆட்டத்தில் இந்தியா – வேல்ஸ் அணியை எதிர்கொள்கிறது

இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

***End of News***